


Metro லீடர்
# மெட்ரோ LEADER
தமிழ் பேசும் மக்கள் 'நமக்கான நாளிதழ்'




லீடர்: 04 இதழ்: 278 2024.09.28 பக்கங்கள்:10 editorml21@gmail.com விலை:75/-

## முன்னாள் எம்.பிக்களின் பாதுகாப்பு நீக்கம்



முன்னாள் சபாநாயகர், முன்னாள் பிரதி சபாநாயகர் மற்றும் முன்னாள் எதிர்க்-கட்சித் தலைவர் ஆகியோரின் பாதுகாப்பை தவிர்த்து, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பிற்காக நியமிக்கப்பட்டிருந்த அனைத்து பொலிஸ் உத்தியோகத்தர்களும் நேற்று (27) முதல் மீள அழைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# பொதுக் கூட்டணிக்காக சந்திரிகா, ரணில், சஜித் பேச்சுவார்த்தை!



02

## பொதுஜன பெரமுனவில் மீண்டும் இணையுமாறு அழைப்பு



ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து விலகி கடந்த ஜனாதிபதி தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடன் இணைந்து கொண்ட மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகளை மீண்டும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவில் இணையுமாறு கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச அழைப்பு விடுத்துள்ளார்.

அடுத்த பொதுத் தேர்தலுக்காக கட்சி மறுசீரமைக்கப்படும் என்றும், திறமையான இளைஞர்களுக்கு அதிக வாய்ப்பு-களை வழங்குவதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும் மேலும் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

## அம்பாறை, புத்தளம் மாவட்டங்களில் மக்கள் காங்கிரஸ் தனித்துப்போட்டி



திருகோணமலை மாவட்டத்தில் இம் முறை எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் கூட்டமை-ப்புடன் இணைந்தே போட்டியிடும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் றிசாட் பதியுதீன் தெரிவித்தார். கிண்ணியா விசன் மண்டபத்தில் நேற்று (27) மாலை இடம்பெற்ற மாவட்ட மத்திய குழு கூட்டத்தின் போதே இவ்வாறு தெரிவித்தார்

02

## இளையோருக்கு சந்தர்ப்பம் அளிக்க விரும்புகின்றேன்



இளையோருக்கு சந்தர்ப்பம் அளித்து அவர்களுக்கு தொடர்ந்தும் துணைநிற்க முடிவு செய்துள்ளேன் என முன்னாள் பாராளு-மன்ற உறுப்பினர் சீ.வி.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

02

## முன்னாள் அமைச்சர்களுக்கு காலக்கெடு!

முன்னாள் அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் தமது ஆட்சிக் காலத்தில் பயன்படுத்திய அனைத்து அரச வீடுகள் மற்றும் பங்களாக்களை உடனடியாக ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. பொது நிர்வாக அமைச்சு, முன்னாள் அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களுக்கு எழுத்து மூலம் நேற்று (27) அறிவித்துள்ளது.

02

## வாகனப்படம் காட்டாமல் முடிந்தால் எரிபொருள் பால்மா விலைக் குறைப்பு செய்து காட்டுங்கள்



வாகனப்படம் காட்டாமல் முடிந்தால் எரிபொருள் பால்மா விலைக்குறைப்பு செய்து காட்டுங்கள் என ஜனாதிபதி அனுரவிற்க்கு ஜே.வி.பி கட்சியின் முன்னாள் மூத்த தலைவரும் பாராளுமன்ற குழு தலைவரும், தேசிய கொள்கைபரப்பு செயலாளரமான விமல் சவால் விடுத்துள்ளார்.

02

## 53.38 இலட்சம் ரூபாவை செலுத்திய முன்னாள் எம்.பி



விபத்து இடம்பெற்று இரண்டு வருடங்களின் பின்னர் தான் பயன்படு-த்திய சொகுசு வாகனத்திற்கான நட்டஈட்டை அண்மையில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் செலுத்தியுள்ளார்

02

## பொதுக் கூட்டணிக்காக...........

முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, ரணில் விக்கிரமசிங்க மற்றும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோர் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் பொதுக் கூட்டணியில் போட்டியிடுவது தொடர்பாக நேற்று (27) தனித்தனியாக கலந்துரையாடியுள்ளனர்.

நிட்டம்புவ பிரதேசத்தில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் ஜனாதிபதித் தேர்தலில் தமக்கு ஆதரவளித்த ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் ரணில் விக்கிரமசிங்க கொழும்பில் உள்ள அவரது இல்லத்திலும், சஜித் பிரேமதாச கொழும்பில் தனது கட்சி உறுப்பினர்களுட னும் இந்தக் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளனர்.

## அம்பாறை, புத்தளம் மாவட்டங்களில்...........

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்

அதேபோல அம்பாறை புத்தளம் மாவட்டங்களிலும் தனித்துப் போட்டியிட வேண்டும் என உயர் பீட உறுப்பினர்கள் தெரிவித்தனர். இன்று (28) சனிக்கிழமை அம்பாறை மாவட்ட மத்திய குழுவை கூட்டி தீர்மானங்களை மேற்கொள்வோம் என தெரிவித்தார்.

குறித்த மத்திய குழு கூட்டத்தில் மக்கள் காங்கிரஸின் தேசிய அமைப்பாளர் அப்துல்லா மஹ்ரூப், உயர்பீட உறுப்பினர் டாக்டர் ஹில்மி முகைதீன் பாவா மற்றும் கட்சி ஆதரவாளர்கள் என பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## இளையோருக்கு சந்தர்ப்பம்...........

தமிழ் மக்களின் அரசியல் தலைமைத்துவத்திற்கு இளைஞர்களின் பங்களிப்பு அதிகமாக வேண்டிய தருணம் வந்துள்ளது. அதனை ஏற்று தமிழ் மக்கள் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் இளையோருக்கு தமது ஆதரவினை அளிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

இந்த சந்தர்ப்பத்தில், கடந்த முறை நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் எனக்கு வாக்களித்து என்னை பாராளுமன்றத்துக்கு தெரிவுசெய்த மக்களுக்கு எனது இதயபூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

நான் பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகித்த இந்த காலகட்டத்தில் என்னால் முடிந்தளவுக்கு பாராளுமன்றத்திலும் சர்வதேச அரங்கிலும் எனது மக்களின் பிரச்சினைகள், துன்பங்கள், துயரங்கள் மற்றும் அபிலாஷைகள் பற்றி எடுத்துக் கூறியுள்ளேன். குறிப்பாக, தமிழ் மக்களின் வரலாறு மற்றும் உரிமைகள் பற்றிய ஒரு விழிப்புணர்வினை சிங்கள மக்கள் மத்தியில் என்னால் ஏற்படுத்த முடிந்துள்ளதாக நம்புகின்றேன்.

நில ஆக்கிரமிப்பை தடுப்பதற்கு சர்வதேச ரீதியான மாநாடுகள் நடத்தி மற்றும் ஒரு ஆவணப்படம் ஒன்றையும் நான் எனது நண்பர்களுடன் இணைந்து மேற்கொண்டிருந்தேன்.

என்னால் முடிந்தவரை இதே பாதையில் தமிழ் மக்களுக்கான எனது அரசியல் பயணம் தொடரும். எனது வீடு கொழும்பில் இருந்தாலும், நான் யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து தங்கியிருந்து தமிழ் மக்கள் கூட்டணி ஊடாக எனது அரசியல் சேவையை முன்னெடுப்பேன். சர்வதேச ரீதியாக எனக்கு இருக்கும் தொடர்புகளின் ஊடாக எமது மக்களின் சுயநிர்ணய உரிமையினை வென்றெடுப்பதற்கு நான் தொடர்ந்து உழைப்பேன்.

## ஐக்கிய மக்கள் சக்தியின் பதவிகளில் மாற்றம்



2024 ஆம் ஆண்டுக்கான ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கர் நியமிக்கப்பட்டுள்ளார்.

குறித்த நியமனத்தை அக்கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று (27) வழங்கி வைத்தார்.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு ஐக்கிய மக்கள் சக்தி இதனை தெரிவித்துள்ளார்.



அதேநேரம் ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்டத் தலைவர் பதவிக்கு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா (27) நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் ஐக்கிய மக்கள் கூட்டணியின் பொதுச் செயலாளராக கேகாலை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிமும் நியமிக்கப்பட்டுள்ளார்.

## 53.38 இலட்சம் ரூபாவை...........

இது தொடர்பில் விளக்கமளித்த மேல் மாகாண சபையின் செயலாளர் தம்மிக்க கே. விஜேசிங்க,

மேல் மாகாண சபைக்கு சொந்தமான சொகுசு வாகனத்தை பயன்படுத்திய போது விபத்துக்குள்ளான சம்பவம் தொடர்பில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சஹான் பிரதீப் விதான கடந்த 24 ஆம் திகதி மாகாண சபைக்கு 53.38 இலட்சம் ரூபாவை செலுத்தியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சஹான் பிரதீப் விதான கம்பஹா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக இருந்த போது அவரது பாவனைக்காக இந்த வாகனம் வழங்கப்பட்டுள்ளது.

மேல் மாகாண சபையின் முன்னாள் சுகாதார அமைச்சர் பயன்படுத்திய சொகுசு காரே இவ்வாறு சஹான் பிரதீப் விதானவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பெறப்பட்ட இந்த அதி சொகுசு கார் 2022 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் பத்தரமுல்லை பெலவத்தை இசுருபாயவிற்கு அருகில் விபத்துக்குள்ளானதுடன் அந்த வாகனத்திற்காக சுமார் 13 மில்லியன் ரூபா காப்புறுதிப் பலன்களாகப் பெறப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், அந்த வாகனத்தை திருத்துவதற்கு தேவையான எஞ்சிய பணத்தை மேல் மாகாண சபையை வழங்குமாறு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சஹன் பிரதீப் விதான கோரிய போதிலும், எஞ்சிய பணத்தை மேல் மாகாண சபை செலுத்த மறுத்ததாக செயலாளர் தம்மிக்க கே. விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

## முன்னாள் அமைச்சர்களுக்கு...........

15 முன்னாள் அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் ஏற்கனவே அரச வீடுகள் மற்றும் பங்களாக்களை ஒப்படைப்பது குறித்து விசாரணை நடத்தியதாக அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னாள் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பல நிறுவனங்களுக்கு அரசாங்கம் வழங்கிய கொழும்பு அரச பங்களாக்களின் எண்ணிக்கை 50 ஆகும். இதேவேளை, பொதுத் தேர்தல் நடைபெறும் திகதி வரை முன்னாள் உறுப்பினர்கள் மாதிவெல குடியிருப்பைப் பயன்படுத்துவதற்கு பாராளுமன்றத் தலைவர்கள் அனுமதி வழங்கியுள்ளனர்.

பாராளுமன்ற தேர்தல் நடைபெறும் எதிர்வரும் நவம்பர் 14ஆம் திகதியோ அல்லது அதற்கு அடுத்த நாளுக்குள்ள வீடுகளை ஒப்படைக்க வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## வாகனப்படம் காட்டாமல் முடிந்தால் ...........

ஆட்சிபீடம் ஏறியுள்ள அனுர குமார திசாநாயக்காவை வாழ்த்துகின்றேன் ஆனால் அவர்கள் எப்படிபட்டவர்கள் என்பது எனக்கு நன்று தெரியும்

அமெரிக்கர்களிடம் 3 வீட்டுக்கு ஒருவாகனம் உள்ளது எனது நாட்டில் ஒவ்வொரு வீட்டிலும் வாகனம் இருக்க வேண்டும் அதுவும் குறைந்த விலையில் 6 மாதத்துக்குள் அவ்வாகனத்தைக் கண்டுபிடித்து உருவாக்கியே ஆகவேண்டும் இல்லையென்றால் மரணதண்டனை வழங்கப்படும் என அறிவித்தார் ஹிட்லர்

அந்த நாட்டில் எல்லாவீட்டிலும் வாகனம் வந்தது

இலங்கையில் தற்போது நடைபெறுவது வெறும் படம் இதற்கு முன் கோட்டாபாய வென்றதும் சித்திரம் கீறினார், தனிவாகனத்தில் பாராளுமன்றம் சென்றார் சில்லரைக்கடையில் அமர்ந்து பரிசீலனை செய்தார் 2 வருடத்துக்குள் ஓடிவிட்டார்

இதேபடத்தை வேறுவிதத்தில் வாகனம் என்ற பெயரில் அனுர முன்கொண்டு செல்லுகின்றார் என்பதை மக்கள் புரியாமலில்லை.

இலங்கையில் நடைபெற்றுள்ளதாக கூறப்படும் அனைத்து நகர்வுகளும் முறையான அனுமதியுடனும் ஆதாரத்துடனுமே நடைபெற்றுள்ளது அதில் இவர்களால் எந்தக்குறையும் ஒருநாளும் கண்டுபிடிக்கமுடியாது அது கால விரையமே

வித்தியாசம் வேண்டுமென்றால் எரிபொருளின் விலையை 100 ரூபாவாக்குங்கள் பால்மாவின் விலையை 300 ரூபாவாக்குங்கள் உங்கள் திறமையை மக்கள் கண்டுகொள்வார்கள்

இந்த ஆட்சிக்கு எதிராக வாக்களித்த 58 வீதமான மக்கள் உங்கள் செயற்பாட்டை பார்த்துக் 'கொண்டிருக்கின்றார்கள்

இதேபடம் தொடருமானால் பாராளுமன்றத்தில் 50 ஆசனங்களை யாவது பெற்றுக்கொள்ள முடியாமல் போய்விடும் என நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது தெரிவித்தார்

## ரணிலுக்கு நன்றி கூறிய NPP தரப்பு

அரசாங்கத்தை சீர்குலைக்கும் நோக்கில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க செயற்படவில்லை எனவும், அதற்காக அவருக்கு நன்றி தெரிவிக்க வேண்டும் எனவும் தேசிய மக்கள் சக்தியின் தேசிய செயற்குழு உறுப்பினர் சத்துரங்க அபேசிங்க தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி ஒன்றில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

வரவிருக்கும் காலத்திற்கு தேவையான எரிபொருள் மற்றும் எரிவாயு கொள்வனவுகள் செய்யப்பட்டுள்ளதாகவும், அதற்கான பணம் அரசாங்கத்திடம் இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்தின் எதிர்வரும் காலப்பகுதிக்கு தேவையான ஏற்பாடுகள் அரசாங்கத்திடம் உள்ளது.

இதேவேளை புதிய நிதியமைச்சர் நியமிக்கப்பட்டதன் பின்னர் அடுத்த வருடத்திற்கான வரவு செலவுத் திட்ட ஆவணத்தை தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

Metro லீடர் மெட்ரோ LEADER
தமிழ் பேசும் மக்கள் 'நமக்கான நாளிதழ்'
Metro Media Network
502, Main Street, Sainthamaruthu- 14.
Sri Lanka.
Ads: 0779007738
News: 0772539298
Circulation: 0766735454

## நாட்டில் வித்திடும் மாற்றம் நிலைத்திடுமா?

நாட்டில் தற்போது நாளுக்கு நாள் புதிய மாற்றங்கள் உருவாகி வருகின்றது. அதனை காப்பாற்றி பாதுகாக்க வேண்டுமாயின், ஒவ்வொரு துறைகளைச் சார்ந்தவர்களும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

மாற்றம் ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணக் கருவே மக்களிடத்தில் ஆழமாக பதிந்திருந்தது. மாற்றம் என எமது நாட்டு மக்கள் கருதுவது அரசியல் முறைமையில் காணப்படும் அனைத்துவிதமான மோசமான பண்புகளை மாற்றுவதையாகும். தற்போது அது நிரூபனமாகியுள்ளது.

ஜனாதிபதி தேர்தலின் பின்னர் எந்தவொரு அழுத்தங்களும் இன்றி பல்வேறு மாற்றங்கள் தாமாகவே இடம்பெறுவதை கண்கூடாக அவதானிக்க கூடியதாகவுள்ளது.

தேர்தல் காலங்களில் மக்கள் மத்தியில் தேசிய மக்கள் சக்தி வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும் இதேவேளை எதிரணியினரால் தேர்தல் மேடைகளில் தேசிய மக்கள் சக்தி தொடர்பாக கூறப்பட்டவைகள் பொய்யாக்கப்பட்டும் வருவதை காணக்கூடியதாகவுள்ளது.

இந்நிலையில் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் தற்போது நாட்டில் எற்படுத்தப்பட்டுவரும் மாற்றம் பாராளுமன்றத் தேர்தலிலும் தேசிய மக்கள் சக்திக்கு பெரும்பான்மை ஆசனங்களுக்கு வித்திடுமா என்ற கேள்வி பலரிடம் காணப்படுகின்றது.

நாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றம் மக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது என்பது மறுக்க முடியாத உண்மையாகவே காணப்படுகின்றது. இந்த மாற்றம் தொடர அனைவரது பங்களிப்பும் அவசியம் என்பதனை அனைவரும் உணர்ந்து செயற்பட வேண்டும்.

editorml21@gmail.com



# லெபனான் மீது இஸ்ரேல் கடும் தாக்குதல்

# அதிகமானோர் உயிரிழப்பு

லெபனானில் புதிதாக இஸ்ரேல் நடத்திய ஏவுகணை தாக்குதலில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 492 ஆக அதிகரித்துள்ளது. இதில் பெண்கள், குழந்தைகளும் அடங்குவர். மேலும், 1,200-க்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாக உறுதியான தகவல்கள் தெரிவிக்கின்றன. போர்ப் பதற்றம் மென்மேலும் வலுத்துள்ளதால், தெற்கு லெபனானில் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேறி வருகின்றனர்.

தெற்கு துறைமுக நகரமான சிடோனில் உள்ள பிரதான நெடுஞ்சாலையில் பெய்ரூட் நோக்கி செல்லும் பகுதியில் கார்கள் நிரம்பியுள்ளதாக கூறப்படுகிறது. அதோடு, அப்பகுதியில் உள்ள பாடசாலைகள் அனைத்தும் மாற்று இடங்களாக மாற்றப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதனிடையே லெபனான் பொதுமக்கள் பயன்படுத்தும் செல்போன்களில் இஸ்ரேல் எஸ்.எம்.எஸ்.களை அனுப்பியுள்ளதாக கூறப்படுகிறது. அதில் குறிப்பிட்ட வரைபடத்தை பகிர்ந்துள்ளதாகவும், அங்கு ஹிஸ்புல்லா அமைப்பின் ஆயுதங்கள் இருப்பதாகவும், எனவே அங்கெல்லாம் குண்டு வீசப்போகிறோம் என்றும் தெரிவித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த சூழலில் இஸ்ரேல் ராணுவம் மற்றும் லெபனான் நாட்டின் ஹிஸ்புல்லா அமைப்புக்கு இடையிலான போர் தீவிரமடைந்து வருகிறது.

முன்னதாக கடந்த 17-ம் தேதி ஹிஸ்புல்லா இயக்கத்தினர் பயன்படுத்திய 5 ஆயிரம் பேஜர்கள் ஒரே நேரத்தில் வெடித்துச் சிதறின. இதில் பலர் உயிரிழந்தனர். இதற்கு பதிலடியாக இஸ்ரேல் மீது மிகப் பெரிய அளவில் தாக்குதல் நடத்துவோம் என்று ஹிஸ்புல்லா அமைப்பு எச்சரிக்கை விடுத்திருந்து. இதனைத் தொடர்ந்து, சில தினங்களுக்கு முன்பு லெபனானில் ஹிஸ்புல்லா இயக்கத்தினரைக் குறிவைத்து இஸ்ரேல் வான்வழித் தாக்குதல் நடத்தியது. லெபனானின் தலைநகர் பெரூட்டில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் பலர் உயிரிழந்தனர். நேற்று நடத்தப்பட்ட தாக்குதல்களில் 1,300 இலக்குகளை தாக்கியதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்திருந்தது.

இந்நிலையில், லெபனானில் புதிதாக இஸ்ரேல் நடத்திய ஏவுகணை தாக்குதலில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 500-ஐ நெருங்கி உள்ளது. இதன்படி 35 குழந்தைகள் உட்பட 492 பேர் உயிரிழந்துள்ளதாகவும், 1,200 பேர் காயமடைந்துள்ளதாகவும் லெபனான் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. இதனிடையே பெய்ரூட் தாக்குதலுக்குப் பிறகு உயர் தளபதி உயிருடன் இருப்பதாகவும், அவர் தற்போது பாதுகாப்பான இடத்தில் உள்ளதாகவும் ஹிஸ்புல்லா அமைப்பு தெரிவித்துள்ளது.

தெற்கு லெபனானில் கிராமங்கள், நகரப் பகுதிகள் உள்பட பல இடங்களை ஹிஸ்புல்லா ஆயுதக் கிடங்குகளாக பயன்படுத்தி வருவதாக இஸ்ரேல் தெரிவித்திருந்தது. ஹிஸ்புல்லா அமைப்பின் மீதான தாக்குதலை இஸ்ரேல் தீவிரப்படுத்த உள்ள நிலையில், லெபனானில் உள்ள மக்கள் உடனடியாக தங்கள் வீடுகள் மற்றும் ஹிஸ்புல்லா அமைப்பினர் ஆயுதங்களைச் சேமித்து வைத்திருப்பதாகக் கூறப்படும் கட்டிடங்களை விட்டு வெளியேறுமாறு எச்சரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## மனைவி குளிக்க தனித்தீவு வாங்கிய கணவன்

நீச்சல் உடையில் குளிக்க ஆசைப்பட்ட மனைவிக்காக, அவரது கணவர் 418 கோடி ரூபாய் மதிப்பில் ஒரு தனித்தீவை வாங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றமை ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

துபாயை சேர்ந்த தொழிலதிபர் ஜமால் என்பவரது மனைவி சவுதி அல்நாத், இங்கிலாந்தில் பிறந்தவர் . துபாயில் படித்துக் கொண்டிருந்த போது இருவருக்கும் காதல் ஏற்பட்டதை அடுத்து கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன் திருமணம் நடைபெற்றது.

மனைவி மீது மிகுந்த அன்பும் பாசமும் கொண்ட ஜமால், அவருக்காக ஏராளமான மதிப்பு மிகுந்த பரிசுப் பொருட்களை வாங்கித் தந்துள்ளார். இந்த நிலையில், தனது மனைவ பிகினி உடையில் நீச்சல் குளிக்க ஆசைப்பட்டதால், ஜமால் அவருக்காக ஒரு தனித்தீவை வாங்கியுள்ளார்.



அந்த தீவின் மதிப்பு 418 கோடி ரூபாய் என்று கூறப்படுகிறது. இந்த வீடியோ தற்போது இணையத்தில் வைரல் ஆகி வருகிறது. மனைவியின் தனி உரிமை மற்றும் பாதுகாப்புக்காக தீவின் இருப்பிடத்தை அவர் வெளியிட வில்லை.

418 கோடி ரூபாய் செலவில் தனது கணவர் தனி தீவை வாங்கியதற்கு மனைவி நன்றி தெரிவித்ததுடன், என் கணவர் வாங்கிய தீவு ஆசியாவில் தான் உள்ளது, ஆனால் தனி உரிமை காரணமாக அதன் இடத்தை பகிர விரும்பவில்லை.

எனினும், கணவர் என் மீது வைத்துள்ள அன்பையும் பாசத்தையும் நினைத்து நான் பெருமைப்படுகிறேன் என கூறியுள்ளார். இதுகுறித்த வீடியோவை இன்ஸ்டாகிராமில் அவர் வெளியிட்டுள்ளார்.

## மின்சார வாகனங்களின் பயன்பாட்டை மேம்படுத்த இந்தியாவில் பாரிய திட்டம்



இந்தியா முழுவதும் மின்சார வாகனங்களின் பயன்பாட்டை மேம்படுத்தவென 10 ஆயிரத்து 900 கோடி ரூபா செலவில் பாரிய வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்பட உள்ளது. இத்திட்டத்திற்கு இந்திய மத்திய அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 24 இலட்சத்து 79 ஆயிரம் மின்சார இரு சக்கர வண்டிகளுக்கும் 3 இலடசத்து 16 ஆயிரம் மின்சார முச்சக்கர வண்டிகளுக்கும் 14 ஆயிரத்து 28 மின்சார கார்களுக்கும் 88 ஆயிரத்து 500 மின்சார வாகன சார்ஜிங் தளங்களுக்கும் ஒத்துழைப்பு நல்கப்பட உள்ளது.

இத்திட்டத்தை வாகனங்கள் உற்பத்தியாளர்களுக்கான இந்திய சங்கம், டாடா மோட்டார் போக்குவரத்து நிறுவனம், பாரியளவில் வாகனங்களை உற்பத்தி செய்யும் மஹிந்திரா குழுமம் உள்ளிட்ட நிறுவனங்கள் பெரிதும் வரவேற்றுள்ளன.

இது தொடர்பில் வாகனங்கள் உற்பத்தியாளர்களுக்கான இந்திய சங்கத்தின் தலைவரும் டாடா மோட்டார் போக்குவரத்து நிறுவன முகாமைத்துவப் பணிப்பாளருமான ஷைலேஷ் சந்திரா குறிப்பிடுகையில், அரசாங்கத்தின் முன்னோக்கி சிந்திக்கும் முன்முயற்சியே இந்த ஒத்துழைப்பாகும். இது இந்தியாவில் மின்சார பயன்பாட்டு வாகனங்களின் பாவனையை அதிகரிக்க வழிவகை செய்வதோடு முதலீடுகள் அதிகரிக்கவும் துணைபுரியும்.

நாட்டில் சூழல் நேய மின்சார வாகனப் பயன்பாட்டின் வளர்ச்சிக்கு மாத்திரமல்லாமல் சுற்றுச்சூழல் நிலைபேறு தன்மையை நோக்கிய உலகளாவிய செயற்பாட்டில் இந்தியாவின் தலைமைத்துவத்தையும் வலுப்படுத்தும் என்று நாங்கள் நம்புகிறோம் என்றுள்ளார்.

மஹிந்தரா குழுமத்தின் முகாமைத்துவ பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான அனிஷ்ஷாவும் இத்திட்டத்தை வரவேற்று பாராட்டியுள்ளார்.




# பிள்ளைகளை பாதுகாப்போம் சமமாக நடத்துவோம்




எதிர்காலத்தை ஆளப்போகும் இன்றைய இளம் சமுதாயத்தை சகல வழிகளிலும் பாதுகாப்பது பெற்றோர் பாதுகாவலர் அனைவர் மீதும் தலையாய கடமையாகும். சிறுவர்கள் என்ற வகைக்குள் அடங்கும் 18 வயதுக்கு உட்பட்ட ஆண் பெண் இருபாலாரும் இன்று பல்வேறு வகையில் பாதுகாப்பற்ற நிலையை எதிர்நோக்கி உள்ளனர். உலகம் உள்ளங்கைக்குள் சுருங்கிய நிலையிலும் தொழில்நுட்பம் நாளுக்கு நாள் வளர்ச்சி பாதையில் செல்வதாலும் இன்று பல்வேறு உடல் உள சமூக பாதிப்பை சிறுவர் சமூகம் எதிர்நோக்கி உள்ளது.

பொருளாதார நெருக்கடிக்கு எமது நாடு முகம் கொடுத்துள்ள காரணத்தினால் குடும்ப தலைவர்கள் தொழில் நிமித்தம் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளனர் பெண்கள் குடும்பத்தை பொறுப்பேற்று நடத்துகின்றனர் இங்கு ஆண்களின் வெற்றிடம் பல்வேறு சந்தர்ப்பங்களில் உணரப்படுகின்றது. தந்தை இல்லை என்பதை தமக்கு சாதமாக பயன்படுத்திக் கொண்டு பிள்ளைகள் பாடசாலைக்கு செல்வதாக அல்லது பிரத்தியேக வகுப்புக்கு செல்வதாக கூறி விட்டு நண்பர்களுடன் சேர்ந்து தமது வயதுக்கு மீறிய செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். கூட்டாக சேர்ந்து பணத்தைச் சேர்த்து கைத்தொலைபேசிகளை வாங்கி தவணை முறையில் ஒவ்வொருவரும் அதை உபயோகிக்கின்றனர். இதே போல் இருபால் கவர்ச்சி மூலம் ஈர்க்கப்பட்டு இளவயதிலேயே திருமணம் செய்து சீரழிகின்றனர்.

உலக நாடுகளுடன் ஒப்பிடுகையில் எமது இலங்கை நாடு கல்வி சுகாதாரம் என்பவற்றை இலவசமாக வழங்குகின்றது. இதனால் அவற்றின் பெறுமதி தெரியாது கல்வியை இடைநடுவில் நிறுத்தி போதைப்பழக்கம் மற்றும் இணைய வழி விளையாட்டுக்களுக்கு தம்மை அடிமைப்படுத்தி எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கியுள்ளனர் கட்டிளமைப் பருவம் ஆரம்பிக்கும்போது அதில் ஏற்படும் உடல் உள மாற்றங்களை சமாளிக்க தெரியாமல் சுயாதீனமாக இயங்க முற்படுகின்றனர். பெற்றோர் ஆசிரியர்களின் அறிவுரைகளை கேட்காமல் தமது சக பாடிகளை நாடுகின்றனர். இதன்போது அவர்களின் மனப்பாங்கு நடத்தை கோலங்கள் பழக்க வழக்கங்கள் என்பன எதிரொலிக்க துவங்குகின்றது. இதனை கட்டுப்படுத்த முற்படும் போது அவர்கள் வழி தவறிச் செல்கின்றனர்.

இவ் வயதினரை பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் நண்பர்களாக பழகாத விடத்து அவர்களுக்கு உதவி செய்ய முடியாது. ஆண் பெண் இருபாலரும் வழி மாறுவது இப்பருவத்திலேயே ஆகும் சுயமாக முடிவெடுத்தல் உயர்ந்த எதிர்பார்ப்பு கவலை தோல்விகளை தாங்கிக் கொள்ள முடியாமல் தமது பெற்றோர்களே தமது முன்னேற்றத்திற்கு தடையாக இருப்பதாக எண்ணி அவர்களோடு முரண்படல் ஆடை அலங்காரம் சிகை அலங்காரம் பச்சை குத்துதல் என நாட்டம் கொண்டு இவ் வயதிலேயே வழிதவறி செல்கின்றனர். எனவே இவ் விடலைப் பருவத்தினரை பாதுகாப்பது முக்கியமான ஒன்றாகும் இவர்களை கையாளும் பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்களுக்கு வழிகாட்டுதல் முக்கியமான ஒன்றாகும்

இன்றைய சிறுவர்கள் மத்தியில் காணப்படும் முக்கிய பிரச்சினையாக ஓமோன் மாற்றத்தினால் ஆண்கள் பெண் இயல்பு கொண்டும் பெண்கள் ஆணின் இயல்புகள் கொண்டும் பாலின மாற்றம் பெறுகின்றனர். இதனை சமாளிக்க தெரியாமல் உளவியல் ரீதியில் பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர். இதை சமூகம் எவ்வாறு ஏற்றுக்கொள்ளும் நமது நண்பர்கள் தங்களை அங்கீகரிப்பார்களா என சந்தேகம் கொண்டு அவர்கள் தாமாகவே தங்களை தாழ்த்திக் கொள்ளும் நிலை காணப்படுகின்றது. எனவே இத்தகையவர்களையும் சமமாக நடத்துதல் வேண்டும்.

இன்று குடும்பங்களில் சிறுவயதில் ஆண்கள் உழைக்க தொடங்குகின்றனர். குடும்ப நெருக்கடி காரணமாக தொழில் செய்து பணம் ஈட்டுகின்றனர். இந்நிலையில் இங்கு உள்ள ஆண்கள் உயர்வானவர்களாகவும் பெண்கள் ஒரு படி தாழ்த்தியும் நடத்துகின்ற நிலைமை சில குடும்பங்களில் காணப்படுகின்றது. இந்த நிலைமை களையப்பட வேண்டும். ஒரு சாண் பிள்ளையென்றாலும் ஆண் பிள்ளை என்று அவர்களை உயர்த்தியும் பெண்பிள்ளைகளை தாழ்த்தியும் நடத்துவதால் அவர்கள் மனரீதியாக பாதிக்கப்பட்டு தற்கொலை செய்யும் நிலை கூட இன்று எம்மத்தியில் அதிகரித்து காணப்படுகின்றது.

பிள்ளைகள் தொடர்பாக முடிவு எடுக்கும் போது அவர்களது கருத்துக்களினை கேட்டு அவற்றிலும் கவனம் செலுத்துதல் வேண்டும். அவர்களையும் குடும்பத்தில் ஒருவராக அங்கிகரிக்கும் போதுதான் அவர்களுக்கும் குடும்பத்தில் ஒருவராக தங்களை மதிக்கின்றார்கள் என்ற எண்ணம் ஏற்பட்டு குடும்ப ஒழுக்க விளுமியங்களுக்கு கட்டுப்பட்டு நடக்கும் நிலை ஏற்படும். இதனாலே சிறுவர் உரிமை சமவாயமும் பல்வேறு இடங்களில் சிறுவர்களின் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும் என்பதை தெளிவாக வலியுறுத்தி நிற்கின்றது

இன்று போதை மற்றும் சமூக வலைத்தளங்களுக்கு அடிமையாகி தமது எதிர்காலத்தை சீரழிக்கும் நிலை அதிகரித்து உள்ளது இந்நிலையை கட்டுப்படுத்த பாடசாலை கல்வியின் முக்கியத்துவத்தை பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களுக்கு உணர்த்துவதோடு பிள்ளைகளுக்கும் இது தொடர்பான தெளிவுபடுத்தல்களை வழங்க வேண்டும். 18 வருடம் கட்டாய கல்வித் திட்டத்தின் மூலம் பாடசாலைகளில் இன்று இலவசக் கல்வி போதிக்கப்படுகின்றது. தொழில்நுட்ப கல்லூரிகள் தொழிற்பயிற்சி நிலையங்கன் மூலம் சிறந்த தொழில் தகைமையுடைய பாடநெறிகள் கற்பிக்கப்படுகின்றது. இவற்றின் பெறுமதிகளை உணர்ந்து இன்று பாடசாலை மட்டங்களில் கட்டாய கல்வி குழுக்கள் உருவாக்கப்பட்டு பிள்ளைகளை பாதுகாக்கும் முயற்சியில் அனைவரும் ஒன்றிணைந்துள்ளனர். ஒவ்வொருவரும் தத்தமது ஒத்துழைப்பை வழங்கினால் மாத்திரமே எமது சிறுவர்களின் எதிர்காலத்தை பாதுகாத்து அவர்களுக்கு வழங்க முடியும்

எனவே எமது இளம் தலைமுறையினரை பாதுகாத்து அவர்களுக்குரிய உரிமைகளை பெற்றுக் கொடுத்தும் அவர்களை அவர்களாக வாழ செய்ய அனைவரும் ஒன்றிணைவோம்



**ஏ.எம்.கஸ்பியா வீவி,**
**சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர்**
**பிரதேச செயலகம், அட்டாளைச்சேனை**

# போஷாக்குள்ள உணவுகளை தயாரிப்பது தொடர்பான விழிப்புணர்வு

**ஏ.எச்.எம்.ஹாரீஸ்**

நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பிரதேசங்களில் போ'ாக்கு மட்டம் குறைவாக காணப்படும் பிள்ளைகளுக்கு இலகுவான முறையில் போஷாக்குள்ள உணவுகளை தயாரித்து வழங்குதல் தொடர்பாக தாய்மார்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வு நாவிதன்வெளி பிரதேச செயலாளர் ராகுலநாயகி சஜிந்ரன் தலைமையில் அண்மையில் நாவிதன்வெளி கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெற்றது.

தற்போது காணப்படும் சூழ்நிலையில் சிறுவர்கள் உணவுகளில் விருப்பமின்றி காணப்படுகின்றார்கள். இதனால் அவர்களின் போஷாக்கு மட்டம் மிக குறைவாக காணப்படுகின்றது. இதனை நிவர்த்தி செய்யும் பொருட்டு இச்செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதனூடாக எதிர்காலத்தில் நல்ல போஷாக்குள்ள குழந்தைகளை உருவாக்க முடியும் என இதன்



போது தெரிவிக்கப்பட்டது. இந்நிகழ்வில் நாவிதன்வெளி சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.எம். பாயிஸ் கலந்து கொண்டு போசாக்கான உணவுகள் மற்றும் அதன் தயாரிப்பு முறைகள் தொடர்பாக தாய்மார்களுக்கு விளக்கமளித்தார்.

இந்நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட போஷாக்கு மட்டம் குறைந்த பிள்ளைகள் மற்றும் தாய்மார்கள், நாவிதன்வெளி பிரதேச செயலக சிறுவர் மற்றும் பெண்கள் அபிவிருத்தி பிரிவு உத்தியோகத்தர்கள், நாவிதன்வெளி சுகாதார பணிமனையின் உத்தியோகத்தர்கள், குடும்பநல உத்தியோகத்தர்கள் மற்றும் பொது சுகாதார தாதியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை வளாகம் புத்தொளி பெறுமா

**(எஸ்.எம்.எம்.றம்ஸான்)**



வைத்தியசாலை என்பது நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கும் இடமாக மட்டும் இருக்கக் கூடாது.அரசியல் வாதிகளின் பிடியிலிருந்து முழுமையாக விடுவிக்கப்பட வேண்டும். வைத்தியசாலை சூழல் அழகாகவும் ரம்மியமாகவும் நோயாளிகளின் மன நிலையில் மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் பேணப்பட வேண்டும்.

கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை வளாகம் பழைய கட்டிட இடிபாடுகள் குவிந்த வண்ணம், தகடுகள், கம்பிகள் என்பவற்றுடன் கடந்த பல வருடங்களாக காணப்படுவது அனைவரினதும் விமர்சனத்துக்குள்ளாகி வருகின்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குட்பட்ட கல்முனை ஆதார வைத்திய சாலை, சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலை, காரைதீவு பிரதேச வைத்தியசாலை, அக்கரைப்பற்றூ ஆதார வைத்தியசாலை ,சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை என்பன மிகவும்அழகாக இருப்பதுடன் அதன் சூழல் நோயாளிகளுக்கு ரம்மியமாகவும் அமைந்திருப்பது பாராட்டத்தக்க விடயமாகும்.



இதைத் தவிர அம்பாறை பொது வைத்தியசாலை ஏனைய வைத்தியசாலைகளுக்கு ஒரு முன் மாதிரியாக அமைந்துள்ளது.

பாரிய யுத்தம் நடந்த ஒரு இடத்தில் வைத்தியசாலை அமைந்திருப்பது போல் காட்சியளிக்கும் கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை இனிமேலாவது புத்தொளி பெறுமா?

# மக்களின் விருப்பத் தெரிவு சாதிக்குமா...? இல்லையா...?

அதிகாரம் என்பது வழங்கப்படுவதும் பறிக்கப்படுவதும் ஆண்டவனின் நாட்டமே..... நடந்து முடிந்த தேர்தல் நம் எல்லோருக்கும் ஒரு புதிய செய்தியை உணர்த்தி நிற்கின்றது. மரபு ரீதியான அரசியல் கட்சிகள் இரண்டும் நிராகரிக்கப்பட்டு 1965 ஆம் ஆண்டில் தோற்றம் பெற்று புரட்சிகரமான கொள்கையுடன் பயணித்து இரண்டு மகா புரட்சிகளைக் கண்ட ஒரு கட்சி தனது ஸ்தாபக தலைவனையும் பலி கொடுத்து தன் மீது பக்தி கொண்ட சுமார் அறுபதினாயிரம் இளைஞர் யுவதிகளையும் பலி கொடுத்து இரண்டு முறை அரசியல் ரீதியாக தடை செய்யப்பட்ட நிலையில் மீண்டு வந்து ஜனநாயக நடைமுறை அரசியலுக்குள் பிரவேசம் கொண்ட கட்சியாகி தேசிய மக்கள் சக்தி எனும் பேரணிக்கு தலைமைத்துவம் கொடுத்து நாற்பத்தி ஒன்பது வருடங்களின் பின்னர் தனது தலைவனை நிறைவேற்று அதிகாரக் கதிரையில் அமர்த்தியுள்ள தருணம் இது.

ஜேவிபி எனும் மக்கள் விடுதலை முன்னணியின் ஸ்தாபக தலைவர் ரோஹண விஜேவீர ஒரு முறை கூறிய கருத்து நினைவிற்கு வருகிறது. நான் இல்லை என்றாலும் இந்த தேசத்தில் அரசியல் என்றாலே கசந்துபோய் இருக்கும் ஒரு தருணம் வரும். அப்போது எனது ஜேவிபி சகோதரர் ஒருவர் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவார். ஆனால் அவர் பிறப்பில் செல்வந்தராகவோ பணக்காரராகவோ இருக்க மாட்டார். ரோஹண விஜேவீர என்ற தலைவனின் அன்றைய தீர்க்கதரிசனமிக்க கருத்துக்கள் இன்று உண்மையாகி நிற்கின்றன. அனுர குமார திசாநாயக்க என்ற ஒரு தனி மனித ஆளுமை 2000 ஆம் ஆண்டு உருவான அரசியல் பிரவேசத்துடன் 24 வருட கால பயணத்தில் தனது இலக்கை இன்று அடைந்துள்ளது. அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றும் கடந்த காலங்களில் பெரும் கூட்டணிகள் அமைத்து அதிக எண்ணிக்கையில் கட்சிகளின் தலைவர்களின் துணையுடனும் பாரிய பொருளாதார வளங்களுடனும் தேர்தல் பிரச்சாரங்களை முன்னெடுப்பது வழக்கமாகும். இம்முறையும் அதுவே நடந்தேறியது. அனுரகுமார திசாநாயக்க என்பவர் தனது அணியை செப்பனிட்டு மக்கள் முன் கொண்டு சென்ற அவரது வசீகரமான ஆளுமை, தோற்றம், கொள்கை, ஆற்றிய உரைகள், மனித நேய வெளிப்பாடு என்பவை மக்களால் வெகுவாக விரும்பப்படுவதற்கு காரணமாக அமைந்தார். கடந்த பொருளாதார சிக்கல் நிலை மிகுந்த இக்கட்டான கால கட்டத்தில் அவர் பாராளுமன்றத்தில் நிகழ்த்திய உரைகள், அநீதி, வறுமை, இலஞ்சம், மோசடி, திருட்டு, இன முரண்பாடுகள் என்பவற்றுக்கு எதிரான அவரது உறுதியான கொள்கையும் செயற்பாடுகளும் மக்களை வெகுவாகக் கவர்ந்துள்ளன. கடந்த 2019 ஜனாதிபதி தேர்தலில் சுமார் நான்கு



இலட்சம் வாக்குகளை மட்டுமே பெற்ற ஒருவர் நாற்பதுக்கும் அதிகமான இலட்சங்களை வாக்காக பெறுவது சாத்தியமே இல்லை என்று போடப்பட்ட தப்புக் கணக்குகளை தகர்த் தெறிந்துள்ள முடிவுகளாக இவரின் தேர்தல் வெற்றி வரலாறாக எழுதப்பட்டுள்ளது.

இம்முறை அரசியல் மேடைகளில் பிரதானமாக அவர் வழங்கிய வாக்குறுதிகளை ஒவ்வொன்றாக அமல்படுத்துவதில்தான் அவரது அடுத்த ஐந்து வருடத்திற்கான அதிகாரப் பயணம் தங்கி உள்ளது.

விசேடமாக மோசடிகளை ஒழிப்பேன் என்றும், நாட்டில் இடம்பெற்ற இலஞ்ச, ஊழல் போன்றவற்றில் சம்பந்தப்பட்டு நாட்டின் பொருளாதார வளங்களை சூறையாடிய நபர்களை அல்லது கூட்டத்தை சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை பெற்றுக் கொடுப்பேன் என்ற அவரது உறுதிமொழியும் மக்கள் மத்தியில் மிகவும் கவரப்பட்டுள்ளது. அத்துடன் நாட்டின் பொருளாதாரத்தை தூக்கி நிறுத்தும் அவரது திட்டங்களை மக்கள் வெகுவாக வரவேற்கின்றார்கள். இன்னும் அனுரவிடம் நீதி, நேர்மை, உண்மை, கண்ணியம் மற்றும் சிறந்த தலைமைத்துவ பண்புகள் இருப்பதையும் மக்கள் காண்கின்றார்கள். கடந்த காலங்களில் மாறி மாறி பதவிக்கு வந்த இரண்டு மரபு வழி அரசியல் கட்சிகளும் அதன் கூட்டணிகளுமே இந்த நாடு வங்குரோத்து



நிலைமைக்கு வருவதற்கு அடிப்படையான காரணிகள் ஆகும். ஆகவே இம்முறை அந்த இரண்டு கட்சிக் கூட்டணிகளையும் புறந்தள்ளி விட்டு ஒரு புதிய முகத்தை மக்கள் விரும்பி தேர்ந்தெடுத்துள்ளார்கள். மக்களின் விருப்பத்தெரிவு சாதிக்குமா...? இல்லையா.....? என்பதை எதிர்காலமே தீர்மானிக்கும். தன்னுடன் மூன்று பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமே கொண்ட இடைக்கால அரசாங்கம் ஒன்றுடன் பயணிக்கும் அதேவேளை நாட்டின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்யும் நிலையில் தனக்கு உகந்த ஸ்திரமான ஒரு புதிய பாராளுமன்றத்தை அமைக்கும் தேவை ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்காவிற்கு இருக்கிறது. களங்கமற்ற கறை படியாத புதிய முகங்களுக்கு வாய்ப்பு வழங்க வேண்டிய நிலை அவர்களின் கொள்கைக்கு அமைய ஏற்படக்கூடும்.



கடந்த காலங்களில் மக்களுக்கு எதுவுமே செய்ய முடியாமல் பாராளுமன்ற கதிரைகளை சூடாக்கிய அணியின் இறுதிப் பாராளுமன்றமாகவே இது இருக்கலாம். கடந்த காலங்களில் மோசடிகளிலும் பண டீல்களிலும் சம்பந்தப்பட்டு கண்ணை மூடிக்கொண்டு கைகளைத் தூக்கிய உறுப்பினர்கள் மக்களால் புறக்கணிக்கப்படும் நாள் வெகு தொலைவில் இல்லை. சிறுபான்மை கட்சிகளின் உறுப்பினர்களாக தான் சார்ந்த கூட்டணிக்கு ஒரு முகமும் தமக்கு வாக்களித்த மக்களுக்கு இன்னொரு முகமும் காட்டிக் கொண்டு இரண்டு பக்கமும் ஏமாற்றி கோடிகள் பல சம்பாதித்த உறுப்பினர்கள் அவர்களின் சொந்த மக்களால் அரசியலில் இருந்து தூக்கி வீசப்படலாம். கொடுங்கோல் ஆட்சியாளன் கோட்டாபய ராஜபக்சவின் முஸ்லிம் சமூகத்திற்கு எதிரான ஜனாஸா எரிப்பு என்ற இலங்கை முஸ்லிம்களின் உணர்வுகளோடு விளையாடிய பழிவாங்கலுக்கு எதிராக தமது எதிர்ப்பை காட்டவோ, குரல் கொடுக்கவோ வக்கில்லாமல் கூஜா தூக்கியதன் மூலம் மனசாட்சியே இன்றி தனது இனத்திற்கே துரோகம் விளைவித்த துரோகிகளின் மீள் அரசியல் பிரவேசத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படலாம். இவர்களை வழிநடத்தி நாடகமாடிய தலைமைகளுக்கும் கூட இது இறுதிப் பாராளுமன்றமாக அமையலாம். ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்கவின் இந்த இமாலய வெற்றிக்கு இன்னொரு காரணியையும் குறிப்பிட்டாக வேண்டும்.

அவருடன் போட்டியிட்ட சுயாதீன வேட்பாளர் ரணில் விக்ரமசிங்க, ஐக்கிய மக்கள் கூட்டணி வேட்பாளர் சஜித் பிரேமதாச ஆகியோரின் கூட்டணியும் பிரச்சார யுக்திகளுமே ஆகும். ரணில் விக்ரமசிங்க பழமை வாய்ந்த ஆளுமை மிக்க அரசியல் தலைவர், அனுபவசாலி, இக்கட்டான சூழலில் நாட்டை மீட்டெடுத்தவர், சர்வதேச ஆதரவு மிக்கவர் இவ்வாறு ஒரு பக்கம் அவருக்கு நிறைய தகுதிகள் இருந்த போதிலும் ராஜபக்ச அரசின் பங்காளிகள், ஊழல் பேர்வழிகள், ஶ்ரீ லங்கா பொது ஜன பெரமுனவின் உறுப்பினர்கள் மற்றும் கோட்டாபய அரசின் அமைச்சரவை உறுப்பினர்களை தனது கூட்டணியில் இணைத்துக் கொண்டதும் அவர்களை பிரச்சாரத்திற்கு பயன்படுத்தியதும் ஆகும். இவை மக்கள் மத்தியில் பீதியையும் அவநம்பிக்கையும் அவர் மீது ஏற்படுத்தியது எனலாம். மறுபக்கத்தில் கடும் போட்டியாளராக இருந்த ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாச கடந்த 2019 ஆம் ஆண்டு தேர்தலில் 55 இலட்சம் வாக்குகளை பெற்றிருந்த போதிலும் இம்முறை அவரது வாக்குகள் பதின்மூன்று இலட்சங்களால் குறைந்துள்ளன. அவர் மீதான மக்களின் அவநம்பிக்கைக்கு காரணம் அவருடன் இறுதி நேரத்தில் இணைந்து கொண்ட ராஜபக்ச அரசின் பங்காளிகளும் மோசடிக்காரர்களும் ஆகும். இதன் காரணமாக இவருக்கும் இவரது சக போட்டியாளரான ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் வித்தியாசம் இல்லாமல் போன நிலைமையே ஏற்பட்டது.

அது மட்டுமின்றி சில சிறுபான்மை கட்சிகளின் தலைமைகள் இணைந்து கொண்டதனால் பெரும்பான்மை மக்களின் பார்வையில் ஏற்பட்ட அதிருப்தி நிலை.பெரும்பான்மை அரசியல்வாதிகள் இனவாதம் பேசாத ஒரேயொரு தேர்தல் இதுவாகும். ஆனால் மாறாக சிறுபான்மை அரசியல்வாதிகள் மக்கள் மத்தியில் இனவாத சாயத்தை கக்கிக்கொண்டிருந்த ஒரு துரதிர்ஷ்டவசமான நிலைமையை கிழக்கு மாகாணத்தில் காணக்கூடியதாக இருந்தது. அத்துடன் வடக்கு கிழக்கில் அவர்களுக்கும் அவர்களது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் எதிரான கோஷம் போன்றவற்றால் அதிருப்தியுற்ற மக்களின் மன நிலையில் ஏற்பட்ட மாற்றம் என்பவற்றையும் குறிப்பிடலாம். அதுமட்டுமின்றி ரணில் விக்கிரமசிங்க இணைந்து பணியாற்ற விடுத்த அழைப்புகளை தொடர்ச்சியாக நிராகரித்து வந்த சஜித் பிரேமதாச மீது மக்களுக்கு ஏற்பட்ட வெறுப்பும் ஒரு காரணம். அவர்கள் இணைந்திருந்தால் ஜனாதிபதி அனுராவை விட அதிகமாக வாக்குகள் பெற்றிருக்கலாம் என்ற ஓர் அபிப்பிராயம் அவர்களின் ஆதரவாளர்கள் மத்தியில் நிலவுவதை அவதானிக்க முடிகின்றது.

ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவின் பிரச்சார யுக்திகளில் இருந்த கவர்ச்சியும், எதிர்ப்பார்ப்பும், வேகமும், விறுவிறுப்பும், காத்திரமான உரைகளும் சாத்தியமான பலனை சஜித், ரணில் இருவருக்கும் கொடுக்கவில்லை என்பது அனுரவின் எழுச்சிக்கும் வெற்றிக்கும் இன்னுமொரு முக்கிய காரணி என்றும் சொல்லலாம்....

இறுதியாக இன்னுமொரு விடையமும் சுட்டிக்காட்டப்படல் அவசியமாகும். ஜனாதிபதி தேர்தலில் அவரது வெற்றி ஊர்ஜிதம் செய்யப்பட்ட போதும் அவர் ஒன்பதாவது ஜனாதிபதியாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட போதும் கொழும்பிலோ நாட்டின் எந்த பிரதேசத்திலோ ஒரு பட்டாசு வெடித்த சத்தம் கூட கேட்க முடியாத அளவிற்கு அந்த கட்சியினர் குறிப்பாக இளைய தலைமுறை மிக ஒழுக்கமான ஒரு கட்டுக்கோப்பிற்குள் இயங்குவது இலங்கை அரசியல் வரலாற்றில் புதுமை நிறைந்த புதிய மாற்றம் என்று கூறலாம். தனக்கு ஆதரவு வழங்கியர்கள் போன்று ஆதரவு வழங்காத அணியும் இந்த நாட்டு மக்களே. அவர்களையும் அரவணைத்துச் செல்வதுதான் தனது எதிர்கால புதிய பாதை என்பதை ஜனாதிபதி அனுர குமார திஸ ாநாயக்க தனது பதவிப்பிரமாணம் இடம்பெற்றதைத் தொடர்ந்து நிகழ்த்திய முதலாவது உரையில் தெளிவாக குறிப்பிட்டமை ஓர் ஆரோக்கியமான செய்தியாகும்.



**உமர்லெப்பை யாக்கூப்**
**ஒலி/ஒளிபரப்பாளர்,**
**சிரேஷ்ட ஊடகவியலாளர்**

# ஜனநாயகம் இல்லாத ஜனாதிபதித் தேர்தல் முறை



இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் ஒன்பதாவது நிறைவேற்று ஜனாதிபதியினைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் வெற்றிகரமாக நிறைவுற்றுள்ளது. புதிய ஜனாதிபதியும் தனது பொறுப்புக்களை ஏற்றுள்ளார். புதிய ஜனாதிபதியின் தெரிவு சட்டரீதியானது என்பதில் எந்த ஐயமுமில்லை. எனினும் இலங்கை ஜனாதிபதித் தெரிவு முறையின், விருப்பு வாக்கு முறையிலுள்ள குறைபாடு ஜனநாயக விழுமியங்களை மீறுவதாக உள்ளது. அது குறித்த சில அவதானங்களை இக்கட்டுரை அலசுகிறது.

### ஜனநாயகம் என்ன சொல்கிறது?

பெரும்பான்மை வாக்காளார்களின் ஆதரவினைப் பெற்றவரே ஆட்சியாளர்களாகத் தெரிவு செய்யப்பட வேண்டும் என்பது நவீன பிரதிநிதித்துவ ஜனநாயக் கோட்பாட்டின் அடிப்படைத் தத்துவங்களுள் ஒன்று. குடிமக்களை ஆளுகிறவர்கள் பெரும்பான்மை வாக்காளர்களின் ஆதரவினைப் பெற்றிருக்க வேண்டும். எமது புரிதலுக்காக இங்கு பெரும்பான்மை என்பதனை 50 சதவீதத்திற்கு (50% + 1) மேற்பட்டது என எடுத்துக் கொள்ள முடியும். அதாவது 50 சதவீதத்திற்கு மேற்பட்ட வாக்காளர்கள் ஆதரவினைப் பெறுகின்றவரே ஜனநாயக அமைப்பில் ஆட்சியாளர்களாக தெரிவு செய்யப்பட வேண்டும். அத்தகைய ஒருவரினாலேயே பெரும்பான்மை மக்களின் அபிப்பிராயங்களைப் பிரதிபலிக்க முடியும்.

### இலங்கை ஜனாதிபதித் தேர்தல் முறை

இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள அரசியலமைப்பின்படி ஜனாதிபதியினைத் தெரிவு செய்வதற்கு அறுதிப் பெரும்பான்மை முறை பின்பற்றப்படுகிறது. இம்முறையின் பிரகாரம் அளிக்கப்பட்ட மொத்த செல்லுபடியான வாக்குகளில் அரைவாசிக்கு மேற்பட்ட (50 சதவீதத்திற்கு மேல்) வாக்குகளைப் பெற்றவர் ஜனாபதியாகத் தெரிவு செய்யப்பட முடியும். இது பெரும்பான்மையினர் விருப்பினை தெளிவாகப் பிரதிபலிக்கும் ஒரு ஏற்பாடாகும். எனினும் முதலாவது சுற்று வாக்குக் கணக்கெடுப்பில், எந்த வேட்பாளர்களும் 50 சதவீதத்திற்கு மேற்பட்ட (50% + 1) வாக்குகளைப் பெறத் தவறுகின்ற போது, இரண்டாவது சுற்று வாக்குக் கணக்கெடுப்பிற்கு செல்ல வேண்டி ஏற்படுகிறது. இங்குதான் பெரும்பான்மையினர் விருப்புத் தொடர்பான நெருக்கடி எழுகிறது.

### இரண்டாவது சுற்று வாக்குக் கணக்கெடுப்பு எவ்வாறு இடம்பெறுகிறது?

முதல் சுற்றில் எந்த வேட்பாளரும் 50 சதவீதத்திற்கு மேற்பட்ட வாக்குகளைப் பெறத் தவறுகின்ற சந்தர்ப்பங்களில் மட்டுமே இரண்டாவது சுற்று வாக்குக் கணக்கெடுப்பிற்கு செல்ல வேண்டும். முதல் சுற்று வாக்குக் கணக்கெடுப்பில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்ற வேட்பாளர்கள் போட்டிக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஏனைய வேட்பாளர்கள் போட்டியிலிருந்து நீக்கப்படுவர்.

போட்டியிலிருந்து நீக்கப்பட்ட வேட்பாளர்களின் வாக்குச் சீட்டுக்களில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்ற வேட்பாளர்களுக்கு இரண்டாம் அல்லது மூன்றாம் விருப்பு வாக்குகள் அளிக்கப் பட்டுள்ளதா என்ற விடயம் பரிசீலிக்கப்படும். அவ்வாறு பரிசீலிக்கப்பட்டு முதலிரு வேட்பாளர்களுக்கு வழங்கப் பட்ட விருப்பு வாக்குகள் அவர்கள் முதல் சுற்றில் பெற்றுக்கொண்ட வாக்கு எண்ணிக்கையுடன் சேர்க்கபடும். பின்னர் முதலிரு வேட்பாளர்கள் இருவரில் யார் பெரும்பான்மையினைப் பெறுகின்றாரோ அவர் ஜனாதிபதியாக பிரகடனப்படுத்தப்படுவார்.

### இரண்டாம் – மூன்றாம் விருப்பு வாக்குகள்:

ஜனாதிபத் தேர்தல் ஒன்றில் மூன்று வேட்பாளர்கள் மட்டும் போட்டியிடுகின்றபோது, போட்டியிலுள்ள முதலிரு வேட்பாளர்களுக்கும் வழங்கப்பட்ட இரண்டாம் விருப்பத் தெரிவு கவனத்திற் கொள்ளப்படும். ஆனால் குறித்த தேர்தலில் மூன்றிற்கு வேட்பாளர்கள் போட்டியிடுகின்றபோது மூன்றாவது விருப்பு வாக்கும் கவனத்திற் கொள்ளப்படும்.

முதல் சுற்றில் முதலிரு இடங்களைப் பெற்ற வேட்பாளர்களுக்கு விருப்பத் தெரிவுகளை பெற்றுக் கொடுக்கும் போது, போட்டியிலிருந்து நீக்கப்பட்ட வேட்பாளர்களின் வாக்குச் சீட்டுக்கள் ஒவ்வொன்றாக பரிசீலிக்கப்படும். அவ்வாறு பரிசீலிக்கும்போது போட்டியிலிருந்து நீக்கப்படும் ஒரு வேட்பாளரின் வாக்குச் சீட்டில், இரண்டாம் விருப்பத் தெரிவு, போட்டியில் முதல் நிலையில் உள்ளவருக்கும், மூன்றாவது விருப்பத் தெரிவு போட்டியில் இரண்டாம் இடத்தில் உள்ள வேட்பாளருக்கும் வழங்கப் பட்டிருப்பின் இரண்டாவது விருப்பத் தெரிவு மட்டுமே கருத்திற் கொள்ளப்படும். இச்சந்தர்ப்பத்தில் மூன்றாம் விருப்பு வாக்குக் கருத்திற் கொள்ளப்படுவதில்லை.

மாற்றமாக போட்டியிலிருந்து நீக்கப்பட்ட ஒரு வேட்பாளரின் வாக்குச் சீட்டில், இரண்டாம் விருப்பத் தெரிவு, போட்டியிலிருந்து நீக்கப்பட்ட பிறிதொரு வேட்பாளருக்கு வழங்கப்பட்டிருப்பின், அவரது வாக்குச் சீட்டிலுள்ள மூன்றாவது விருப்பத் தெரிவு பரிசீலிக்கப்படும். அவ்வாறு பரிசீலிக்கும்போது மூன்றாவது விருப்பத் தெரிவு, இரண்டாம் சுற்றுப் போட்டிக்காக தெரிவு செய்யப்பட்டுள்ள முதலிரு வேட்பாளர்களுள் யாராயினும் ஒருவருக்கு வழங்கப்பட்டிருப்பின் மூன்றாம் விருப்பத் தெரிவு வாக்கு உரிய வேட்பாளருடைய முதல் சுற்று வாக்குகளுடன் சேர்க்கப்படும்.

### இரண்டாம் சுற்றுக் கணக்கெடுப்பில் வாக்கு எண்ணிக்கை சமனிலையில் முடிந்தால் என்ன செய்வது?

இரண்டாம் சுற்றில் இரண்டாம், மூன்றாம் விருப்பு வாக்குகள் கணக்கிடப்பட்டு, முதலிரு வேட்பாளர்களும் முதல் சுற்றில் பெற்ற வாக்குகளுடன் அவர்கள் பெற்ற விருப்பு வாக்குகள் (முதல் சுற்று வாக்குகள் + விருப்பு வாக்குகள்) சேர்க்கப்படும். பின்னர் இருவருள் பெரும்பான்மை பெற்றவர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவார். எனினும் வேட்பாளர்கள் இருவரினதும் வாக்குகள் சமநிலையில் காணப்படும்போது, திருவுளச் சீட்டின் மூலம் வெற்றியாளர் தெரிவு செய்யப்படுவார். இதனை நாம் மூன்றாம் சுற்று கணக்கெடுப்பு என்றும் கருதாலம். அதாவது திருவுளச் சீட்டில் தெரிவு செய்யப் படுபவருக்கு மேலதிகமாக ஒரு வாக்கு அளிக்கப்பட்டு பெரும்பான்மை உறுதி செய்யப்படும்.

### இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் - 2024

இலங்கையில் 21.09.2024 ஆம் திகதி இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் 38 வேட்பாளர்கள் போட்டியிட்டனர் (மரணித்த ஒரு வேட்பாளர் தவிர்ந்த). முதல் சுற்று வாக்குக் கணக்கெடுப்பில் எந்த வேட்பாளரும் 50 சதவீதத்திற்கு மேற்பட்ட வாக்கினைப் பெறத்தவறியிருந்தனர். அதிக பட்சமாக தற்போதைய ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க 42.31 சதவீத வாக்குகளும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரமேதாச 32.76 சதவீத வாக்குகளையும் பெற்றிருந்தனர். ஏனைய வேட்பாளர்கள் அனைவரும் முதலிருவரையும் விட குறைவான வாக்குகளையே பெற்றிருந்தனர். இதனால் முதல் சுற்றில் ஜனாதிபதியினைப் பிரகடனம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது.

### இரண்டாம் சுற்றில் என்ன நடந்தது?

தேர்தல் முறையின் பிரகாரம், இரண்டாம் சுற்றுக் கணக்கெடுப்பிற்காக அனுர குமார திசாநாயக்க, சஜித் பிரமேதாச ஆகிய இருவரும் முதலிரு போட்டியாளர்களாக அறிவிக்கப்பட்டு, ஏனைய 36 வேட்பாளர்களும், அப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளடங்களாக போட்டியிலிருந்து நீக்கப்பட்டனர்.

பின்னர் போட்டியிலிருந்து நீக்கப்பட்ட 36 வேட்பாளர்களினதும் வாக்குச் சீட்டுக்கள் பரிசீலிக்கப்பட்டது. அவ்வாறு பரிசீலிக்கும் போது, நீக்கப்பட்ட 36 வேட்பாளர்களினதும் வாக்குச் சீட்டுக்களில் அனுர குமார, சஜித் பிரேமதாச ஆகியோருக்கு இரண்டாம், மூன்றாம் விருப்பத் தெரிவுகள் வழங்கப்பட்டுள்ளதா என்ற விடயம் கருத்திற் கொள்ளப்பட்டது.

உதாரணமாக, ரணில் விக்கிரமசிங்கவிற்கு முதல் விருப்பு வழங்கப்பட்ட வாக்குச் சீட்டொன்றில், இரண்டாம் விருப்புத் தெரிவு அனுர குமார திசாநாயக்கவுக்கும் மூன்றாம் விருப்பத் தெரிவு சஜித் பிரமேதாசாவுக்கும் வழங்கப்பட்டிருந்தது எனின், இரண்டாம் விருப்பத்

தெரிவு ஒரு வாக்காகக் கருதப்பட்டு அந்த வாக்கு அனுர குமார திசாநாயக்க ஏற்கனவே முதல் சுற்றில் பெற்றிருந்த வாக்குகளுடன் சேர்க்கப்படும். இந்த சந்தர்ப்பத்தில் மூன்றாம் விருப்பத் தெரிவு கருத்திற் கொள்ளப்படுவதில்லை.

அதேவேளை, ரணில் விக்கிரமசிங்கவுக்கு முதல் விருப்பத் தெரிவு வாக்கு அளிக்கப்பட்ட வாக்குச் சீட்டொன்றில் இரண்டாம் விருப்பத் தெரிவு நாமல் ராஜபக்ஸவுக்கும் மூன்றாம் விருப்பத் தெரிவு சஜித் பிரேமதாசாவுக்கும் வழங்கப்பட்டிருந்தது எனின், இங்கு மூன்றாம் விருப்பத் தெரிவு கருத்திற் கொள்ளப் பட்டு அந்த வாக்கு சஜித் பிரமேதாச முதல் சுற்றில் பெற்றுக்கொண்ட வாக்கு களுடன் சேர்க்கப்படும். இவ்வாறுதான் இரண்டாவது சுற்றில் வாக்குக் கணக் கெடுப்பு இடம்பெற்றது. மூன்றாவது விருப்பத் தெரிவினைக் கணக்கிடு வதற்காக மூன்றாவது சுற்றுக் கணக்கெடுப்பு ஒன்றுக்கு செல்வதில்லை.

### இரண்டாம் சுற்றினூடாக வெற்றியாளர் எவ்வாறு தீர்மானிக்கப்பட்டார்?

முதல் சுற்றில் அனுர குமார திசாநாயக்க 5,634,915 (42.31%) வாக்குகளும் சஜித் பிரமேதாச 4,363,035 (32.76%) வாக்குகளும் பெற்றிருந்தனர். அதாவது அளிக்கப்பட்ட மொத்த செல்லுபடியான வாக்குகளில் அரைவாசிக்கு (50%) மேற்பட்ட வாக்கினை எவரும் பெறவில்லை. ஆதலால் இரண்டாம் சுற்றில், அவர்கள் இருவருக்கும் போட்டியிலிருந்து நீக்கப்பட்ட வேட்பாளர்களின் வாக்குச் சீட்டில் அளிக்கப்பட்டுள்ள இரண்டாம், மூன்றாம் விருப்பத் தெரிவுகள் கணக் கிடப்பட்டது.

இரண்டாம் சுற்றுக்கணக் கெடுப்பில், போட்டியிலிருந்து நீக்கப்பட்ட வேட்பாளர்களின் வாக்குச் சீட்டுக்களில், அனுர குமார திசாநாயக்காவுக்கு 105,264 விருப்பத் தெரிவு வாக்குகளும் சஜித் பிரமேதாசவுக்கு 167,867 விருப்பு வாக்குகளும் வழங்க ப்பட்டிருந்தது.

பின்னர் இந்த வாக்குகள் இவ்விரு வேட்பாளர்களும் முதல் சுற்றில் பெற்றுக் கொண்ட வாக்குகளுடன் கூட்டப்பட்டது. இதன்படி அனுர குமார திசாநாயக்க

06ம் பக்கத் தொடர்ச்சி...




பெற்றுக்கொண்ட மொத்த வாக்குகள் 5,740,179 (5,634,915 +105,264) எனவும் சஜித் பிரமேதாச பெற்றுக் கொண்ட மொத்த வாக்குகள் 4,530,902 (4,363,035 +167,867) எனவும் தீர்மானிக்கப்பட்டது

அதன் பின்னர், அனுர குமார திசாநாயக்க மற்றும் சஜித் பிரமேதாச ஆகியோரது மொத்த வாக்குகள் ஒப்பீடு செய்யப்பட்டு இரு வேட்பாளர்களிலும் அனுர குமார திசாநாயக்க பெரும் பான்மையினைப் பெற்றிருப்பதால் அவர் வெற்றியாளர் என தேர்தல் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டது.

அதற்கிணங்க, இலங்கையின் ஒன்பதாவது நிறைவேற்று ஜனாதிபதியாக அனுர குமார திசாநாயக்க தனது பதவியினை திங்கட்கிழமை (23) பிரதம நீதியரசர் முன்னிலையில் உத்தியோக பூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்டார். இலங்கை அரசியலமைப்புச் சட்டத்தின் பிரகாரம் அவர் தெரிவு செய்யப்பட்ட முறையில் எந்தப் பிரச்சினையும் இல்லை.

### ஜனநாயகம் எங்கு மீறப்படுகிறது?

இலங்கையில் தமது வாக்குரிமையினை முறையாகப் பயன்படுத்திய பெரும்பான்மை வாக்காளர்கள் இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்காவினை ஆதரவிக்கவில்லை என்பதனையே தேர்தல் முடிவுகள் காட்டுகிறது. முதல் சுற்றில் ஜனாதிபதி பெற்றுக்கொண்ட வாக்குகள் 42.31 சதவீதம் மட்டுமே. 57.69 சதவீத வாக்குகள் அவருக்கு எதிராக வழங்கப்பட்டுள்ளது.

இரண்டாம், மூன்றாம் விருப்பத் தெரிவுகள் சேர்க்கப்பட்டு பெறப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கையும் வாக்காளர்களின் பெரும் பான்மை அபிப்பிராயத்தினை தெளிவாகப் பிரதிபலிப்பதாக அமையவில்லை. அதாவது இரண்டாம் சுற்றில் பெறப்பட்ட வாக்குகளின் சேர்க்கை யுடனான மொத்த வாக்குகளின் எண்ணிக்கையினைப் பார்க்கிறபோது, 7,579,437 வாக்குகள் ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்காவுக்கு எதிராக வழங்கப்பட்டுள்ளது.

எனவே பெரும்பான்மை வாக்காளர்கள் விரும்பாத, போட்டியிட்ட வேட்பாளர்களுள் அதிகூடிய வாக்கினைப் பெற்ற ஒருவரே இலங்கையின் தற்போதைய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இதனை நாம் அரசியல் கண்ணோட்டத்தில் சிறுபான்மை ஜனாதிபதி என அழைக்கலாம். இங்கு சிறுபான்மை என்பது இலங்கையின் சிறுபான்மை – பெரும்பான்மை இனத்துவ வேறுபாட்டினை அடிப்ப டையாகக் கொண்டதல்ல என்பதனை கவனத்திற் கொள்ள வேண்டும். மாற்றமாக வாக்காளர் எண்ணிக்கை அடிப்படையில் தற்போதைய ஜனாதிபதி சிறுபான்மை ஆதரவு பெற்ற ஜனாதிபதி எனப்பொருள் கொள்ளப்படலாம்.

### எங்கு தவறு நடந்திருக்கிறது?

இலங்கையின் தற்போதைய ஜனநாயக சோசலிசக் குடியரசு யாப்பு வரையப்பட்டபோது, பிரான்சிய, அமெரிக்க மாதிகள் கருத்திற் கொள்ளப்பட்டது.

இலங்கையில் ஜனாதிபதி யினைத் தெரிவு செய்வதற்கு பிரான்சிய மாதிரியினை ஒத்த தேர்தல் முறையே அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தனாவினால் அறிமுகம் செய்யப்பட்டது.

இம்முறையில் முதல் சுற்று வாக்குக் கணக்கெடுப்பின் ஊடாக ஜனாதிபதி தெரிவு செய்யப்படும்போது, பெரும்பான்மை விருப்பு தெளிவாகப் பிரதிபலிக் கப்படும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு ஜனாதிபதியினைத் தெரிவு செய்யமுடியாத விடத்து, இரண்டாம், மூன்றாம் விருப்புத் தெரிவுகளை கணக்கிட்டு ஜனாதிபதியினைத் தெரிவு செய்ய இடமளிக் கப்பட்டுள்ளது. இதன்போது பெரும்பான்மை யினர் விருப்புக் கருத்திற் கொள்ளப்படுவதில்லை.

இம்முறை ஜனாதிபதித் தேர்தல் தவிர்ந்த, இரண்டாம், மூன்றாம் விருப்பு வாக்கு களைக் கணக்கிடும் சந்தர்ப்பங்கள் இதற்கு முன்னர் இலங்கையில் இடம்பெற்ற எந்தவொரு ஜனாதிபதித் தேர்தலிலும் பரீட்சித்துப்பார்ப்பதற்கான சந்தர்ப்பம் ஏற்படவில்லை.

### பிரான்சிலும் இலங்கை தேர்தல் முறைதான் நடைமுறையிலுள்ளதா?

இலங்கை போலல்லாது பிரான்சில் ஜனாதிபதியினைத் தெரிவு செய்வதற்கு இரு சுற்று வாக்களிப்பு முறையி னைப் பின்பற்றுகின்றனர். அதாவது முதலாவது சுற்று வாக்களிப்பில் அறுதிப் பெரும்பான்மையினை (50 சதவீதத்திற்கு மேல்) பெறுவதற்கு எந்தவொரு வேட்பாளரும் தவறும் பட்சத்தில், இரண்டாம் சுற்று வாக்களிப்பு இடம்பெறும்.

இங்கு இரண்டாம் சுற்று வாக்களிப்பு என்பது இரண்டாவது தேர்தல் என புரிந்துகொள்ளலாம். ஆனால் இரண்டாம் சுற்றுத் தேர்தலில் முதல் சுற்றில் முதலிரு இடங்களைப் பெற்ற வேட்பாளர்கள் மட்டுமே போட்டியிடமுடியும். இரண்டாம் சுற்று வாக்களிப்பு முதல் சுற்று வாக்களிப்பு இடம் பெற்று, சில வாரங்களின் பின்னரே இடம்பெறும்.

இரண்டாம் சுற்று வாக்குச் சீட்டில் முதல் சுற்றில் பெரும்பான்மை பெற்ற இரு வேட்பாளர்களினது பெயர்கள் மட்டுமே இடம்பெற்றிருக்கும்.

இரண்டாம் சுற்று வாக்களிப்பின் பின்னர் மீண்டும் வாக்குகள் எண்ணப்பட்டு, அறுதிப் பெரும்பான்மையினை (50 சதவீதத்திற்கு மேல்) பெறும் வேட்பாளர் வெற்றியாளராகத் தெரிவு செய்யப்படுவார். இம்முறையில் பெரும்பான்மை வாக்காளர்கள் விரும்பாத ஒருவர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவதற்கு இடமளிக்கப்படுவதில்லை.

சில சந்தர்ப்பங்களில் முதல் சுற்றில் முன்னணியில் இருந்த வேட்பாளர், இரண்டாம் சுற்றில் 50 சதவீதத்திற்கு மேற்பட்ட வாக்கினைப் பெறுவதற்கான சந்தர்ப்பத்தினை இழக்க முடியும். எனினும் வாக்காளர் களின் பெரும் பான்மை ஆதரவு பெற்ற ஒருவரே ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட முடியும் என்பதனை பிரான்சிய தேர்தல் முறை உறுதிசெய்கிறது.

பிரான்சில் 2022 ஏப்ரலில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் பலர் போட்டி யிட்டனர். அவர்களுள் எவரும் முதல் சுற்று வாக்களிப்பில் அறுதிப் பெரும்பான்மை யினைப் பெறவில்லை (இமானுவல் மெக்ரன் 27.9% - மெரைன் லீ பென் – 23.2%). அச்சந்தர்ப்பத்தில் முதலிரு இடங்களைப் பெற்ற பிரான்சின் தற்போதைய ஜனாதிபதி இமானுவல் மெக்ரன், மெரைன் லீ பென் ஆகியோரினுள் ஒருவரைத் தெரிவு செய்வதற்கான இரண்டாம் சுற்று தேர்தல் இடம்பெற்றது.

இரண்டாம் சுற்றுத் தேர்தலில் இமானுவல் மெக்ரம் 58.5 சதவீத வாக்குகளையும் மெரைன் லீ பென் 41.5 சதவீத வாக்குகளையும் பெற்றுக் கொண்டனர். இதன்படி இமானுவல் மெக்ரன் அறுதிப் பெரும்பான்மையினை உறுதி செய்ததன் மூலம் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

### நாம் என்ன செய்வது?

இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள அரசியலமைப்புத் தொடர்பாக பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ளன. அத்தகைய அரசியலமைப்பினை மாற்றியமைக்கிறபோது, இலங்கையின் தேர்தல் முறைகளும் மறுசீரமைக்கப்பட வேண்டும். பெரும்பான்மை வாக்காளர்கள் விரும்பு கின்றவர்கள் ஆட்சியாளர் களாக தெரிவு செய்யப்படும் ஒரு முறையின் மீது கவனம் செலுத்த வேண்டும். அதேவேளை, சட்டவாக்க அமைப்புக்களில் மாற்று அபிப்பிராயங்களை முறையாகப் பிரதிபலிக்கக்

07ம் பக்கத் தொடர்ச்சி...




கூடிய தேர்தல் முறைமை யொன்றாக தற்போது நடைமுறையிலுள்ள விகிதாசாரப் பிரதிநித்துவ முறை (பாராளுமன்றத் தேர்தல் முறை) உள்ளது. எனினும் அங்குள்ள விருப்பு வாக்குமுறை தொடர்பிலும் பல்வேறு விமர்சனங்கள் உள்ளன. அவையும் சீர்செய்யப்பட வேண்டும்.

இம்முறை தேர்தல் முடிவுகளினூடாக பாரம்பரிய அரசியல் கட்டமைப்புக்களிலும் கலாசாரத்திலும் மக்கள் பெறுப்புற்றுள்ளதனை அறியமுடிகிறது. பெரும்பான்மை இனத்தவர் - சிறுபான்மை இனத்தவர் என்ற அரசியல் கோஷங்களுக்கு வாக்காளர்கள் செவிசாய்க்க வில்லை. நாட்டின் வளர்ச்சியினை நோக்கிய, ஒரு முறைமை மாற்றத்தினை அவர்கள் எதிர்பார்த்துள்ளனர் என்பது தெளிவாகிறது.

அதற்கான உறுதிமொழிகளை வழங்கியே புதிய ஜனாதிபதியும் பதவிக்கு வந்துள்ளார். புதிய ஜனாதிபதி ஆயிரத்தினுள் ஒருவராக இருந்து விட்டுச் செல்லாமல், இலங்கையில் வாழும் அனைத்தின மக்களுக்கும் பங்கமில்லாத ஜனநாயக

அரசியல் மறுசீரமைப்பில் கவனம் செலுத்தி, நாட்டைக் கட்டியெழுப்பும் ஒரு தலைவ ராக மிளிர வேண்டும் என்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பு.



**பேராசிரியர் எம்.ஏ.எம்.பௌசர்**

# சவூதி அரேபியாவின் 94 ஆவது தேசிய தின நிகழ்வு












அஸ்ஹர் ஆதம்

சவூதி அரேபியாவின் 94 ஆவது தேசிய தினத்தையொட்டி கொழும்பிலுள்ள சவூதி அரேபிய தூதரகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வொன்று இலங்கை க்கான சவூதி அரேபியத் தூதுவர் காலித் பின் ஹமூத் அல் கஹ்தானி தலைமையில் ஷங்கரிலா ஹோட்டலில் கடந்த செவ்வாய்க்கிழமை (24) மாலை இடம்பெற்றது.

ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயகவின் தலைமை யிலான புதிய அரசாங்கத்தின் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் கலந்து கொண்டார்.

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் இங்கு உரையாற்றுகையில்,

சவூதி அரேபியாவுக்கும் இலங்கைக்குமிடையில் மிக நீண்டகால இருந்து வரும் நட்புறவு அனுர குமார திஸாநாயக தலைமையிலான அரசாங்கத்தில் மேலும் வலுப்படுத்தப்படும் சவூதி அரேபியாவில் தொழில் புரியும் சுமார் இரண்டு லட்சத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்களின் தொழிற் பிரச்சினைகளில் அதிக கரிசனை காட்டப்படும் அத்துடன் அவர்களின் குடும்பங்களின் பாதுகாப்பு க்களும் உறுதி செய்யப்படு மெனவும் தெரிவித்தார்.

இங்கு உரையாற்றிய தூதுவர் காலித் பின் ஹமூத் அல் கஹ்தானி கருத்துத் தெரிவிக்கையில்

இரு நாடுகளுக்குமிடையிலான பரஸ்பர உறவை வலுப்படுத்த தன்னாலான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப் படும்.

இளவசர் முகமது பின் சல்மான் மற்றும் இரு புனித பள்ளிவாயல்களின் பாதுகாவலர் மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல சஊத் ஆகியோரின் ஆசிர்வாதத்துடன் இலங்கையின் அபிவிருத்தி க்கான அனைத்து ஒத்துழைப் புக்களும் எதிர்காலத்தில் தொடர்ந்தும் வழங்கப்படும்

இரு நாடுகளும் வர்த்தகம், முதலீடு, கலாசாரம் மற்றும் மனிதவள மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இரு நாடுகளுக்கு மிடையேயான உறவை மேலும் வலுப்படுத்தும் பொருட்டு இரு மக்களும் தொடர்ந்து ஒத்துழைக்க வேண்டும் என்றும், இரு நாடுகளின் இடையேயான வர்த்தகம் மற்றும் முதலீட்டை அதிகரிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இந்நிகழ்வில் முன்னாள் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் களான ரஊப் ஹக்கீம், எம்.ஏ.சுமந்திரன் ஏ.எச்.எம். பௌஸி, அலி ஸாஹிர் மௌலானா, எம்.எஸ்.தௌபீக், ஹாபிஸ் நஸீர் அஹ்மட் உட்பட வெளிநாட்டுத் தூதுவர்கள் உயரிஸ்தானிகர்கள் இராஜதந்திரிகள் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜயவர்த்தன மற்றும் அமைச்சுக்களின் செயலாளர்கள் சவூதி அரேபியத்தூதுரக அதிகாரிகள், இஸ்லாமிய இயக்கங்கள் மற்றும் சமூக சேவை நிறுவனங்களின் பிரதிநிதிகள் முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் மற்றும் முக்கிய உலமாக்கள், ஊடகப் பிரதானிகள் முப்படைகளின் முக்கிய ஸ்தர்கள் உட்பட முக்கியஸ் தர்கள் பலரும் இதில் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் 94 ஆவது தேசிய தினத்தையொட்டி ஞாபகார்த்த கேக் ஒன்றும் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர் காலித் பின் ஹமூத் அல் கஹ்தானி மற்றும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜயவர்த்தன ஆகியோரால் வெட்டி வைக்கப்பட்டது.



# மூல நோய்




Fig: Internal and External Hemorrhoids

மூலநோய் என்பது குதவழியில் காணப்படுகின்ற இரத்தக் குழாய்களின் பின்னல் (Anal Cushion) வீங்குவதனால் ஏற்படுகின்ற ஒரு வகை நோயாகும். இவ்வாறு வீக்கமடைந்த இரத்தக் குழாய்கள் நாளடைவில் மலம் கழிக்கும்போது ஏற்படும் உராய்வினால் சேதப்பட்டு இரத்தக் கசிவு ஏற்படுகிறது. இதில் இரு வகையுண்டு. உள் மூலவியாதி, வெளி மூலவியாதியென பிரிக்கலாம்.

அநேகமானவர்கள் உள் மூலவியாதியினாலேயே பாதிக்கப்படுகின்றனர்.

இந்நோய் ஏற்பட்டுள்ள இடம், அதன் தீவிரத்தன்மை என்பவற்றிற்கமைய நான்கு கட்டங்களாக (Stages) காணப்படும்.

1. மலம் கழிக்கும்போது மூலம் வெளியே வராது, ஆனால் இரத்தம் வெளியேறிக் கொண்டிருக்கும்.

2. மலம் கழிக்கும்போது மூலம் வெளியில் வரும், ஆனால் மலம் கழித்த பின்னர் அது தானாகவே உள்ளே சென்றதும் இரத்தம் வெளியேறும்.

3. மலம் கழிக்கும்போது மூலம் வெளியில் வரும், பின்னர் தானாக உள்ளே செல்லாது. ஆனால் இரத்தம் வெளியேறும்.

4. எப்போதும் மூலம் வெளியில் இருக்கும். வெளியில் வந்த கட்டி அழுகிய நிலையில் இரத்தம் ஒடிக்கொண்டிருக்கும், வலியும் ஏற்படும்.

குதவழியால் ஏற்படும் இரத்தப் போக்குகள் எல்லாமே மூல வியாதியல்ல என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

அதாவது, குதவழியில் இரத்தப்போக்கு ஏற்பட பல காரணங்கள் காணப்படுகின்றன. உதாரணமாக, குதவாய் வெடிப்பு (Anal Fissure), பெருங்குடல் அலர்ச்சி (Colitis), குதவழியில் ஏற்படும் வளர்ச்சி (Anal Polyp), முக்கியமாக குதவழியில் ஏற்படுகின்ற புற்றுநோய் போன்ற இன்னும் பல உள்ளன. இவற்றுள் மிகக் கூடுதலானவர்களுக்கு இரத்தப்போக்கு ஏற்படக் காரணமாக அமைவது மூலநோயாகும்.

பொதுவாக, 45 - 65 வயதிற்குட்பட்டோர் இந்த நோயினால் அதிகம் பாதிக்கப்படுவார்கள். ஆனால் தற்போது இளம் வயதினர் 18 - 45 வயதுக்குட்பட்டவர்கள் மிக அதிகமான தாக்கத்துக்கு ஆளாகிறார்கள். ஏனென்றால், அவர்களின் அன்றாட உணவுப்பழக்க வழக்கங்கள், அவர்களின் மனநிலையில் ஏற்படுகின்ற மன அழுத்தம், சரியான முறையில் மலசலகூட பழக்க வழக்க முறைகளை பின்பற்றாமை, உரிய நேரத்தில் மலம் கழிக்க பழக்கப்படாமை போன்ற விடயங்களினால் அதிகமான இளம் வயதினர் பாதிப்புக்குள்ளாக்கின்றனர்.

மலச்சிக்கல் உள்ளவர்கள் மலத்தை வெளியேற்றுவதற்காக முக்கும்போது ஏற்படுகின்ற அழுத்தம் காரணமாக குதவழியில் இருக்கின்ற நாளங்கள், நாடிகள் பெருத்து வீங்கி வெடிப்பதன் மூலமாகவும் இது ஏற்படுகிறது.

மேலும், பரம்பரை, அதிக உடற்பருமன், நார்ச்சத்து குறைவான உணவுகளை உட்கொள்தல், அளவுக்கு அதிகமான எடையை (பாரத்தை) தூக்குதல், உடற்பயிற்சியின்மை, குதவழியில் வழக்கத்திற்கு மாறாக கட்டி வளர்தல், பிரசவம் போன்ற காரணங்களாலும் ஏற்படுகிறது.

மலம் கழிக்கும் முன்னர், கழிக்கும்போது, கழித்த பின்னர் இரத்தம் வெளியேறும், இதில் சிலருக்கு மலம் கழிக்கும் முன்னர் குழாயிலிருந்து நீர் வெளியேறுவதைப் போன்று இரத்தம் வெளியேறும். இது முக்கியமானதும் பொதுவானதுமான நோய் அறிகுறிகளில் ஒன்றாகும். இது தவிர சிலருக்க மலம் கழிக்கும் வாயிலில் கட்டிகள் ஏற்படுதல், மலம் கழிக்கும்போது கட்டிகள் வெளியில் வருதல், கடுமையான வலி, எரிச்சல் மற்றும் அரிப்பு போன்ற அறிகுறிகளும் இருக்கும்.

குறிப்பாக இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏற்படுகின்ற கடுமையான வலியும், மலம் கழிக்க முடியாமல் ஏற்படுகின்ற அரிப்புத் தன்மை, மன அழுத்தம் அதிகமாகக் காணப்படுவதனாலேயே அவர்கள் அதிக கோபப்படுகிறார்கள். ஆனால், இந்நோய்க்கும் கோபத்திற்கும் எவ்வித நேரடித் தொடர்புமில்லை என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

அதிக குருதியிழப்பு ஏற்படுவதனால் குருதிச்சோகை (Anemia) ஏற்படும். இதுதவிர மூலத்திலுள்ள கட்டி காயமடைதல், அழுகுதல், கிருமித் தொற்றுக்குள்ளாதல், மூலத்தில் வலி ஏற்படல் மற்றும் நீண்ட காலத்தில் குதவழியில் சுருக்கம் போன்ற பாதிப்புக்கள் ஏற்படும். ஆனால், மூலநோய் ஒருபோதும் புற்றுநோயாக மாறமாட்டாது.

இந்த நோயை அறுவைச் சிகிச்சை முறை மூலம் அகற்றுவதனால் மீண்டும் வருவதற்கான சாத்தியம் மிகக் குறைவாகவே இருக்கின்றது. ஆனால், ஊசி அடித்தல், வேன்டிங் என்ற வளையம் போடுவது, லேசர் முறைகளைச் செய்கின்றவர்களுக்கு மீண்டும் இது வருவதற்கான சாத்தியமுள்ளது.

இந்நோயிலிருந்து தப்பித்துக்கொள்ள வேண்டுமாக இருந்தால் மலத்தினை அடக்கக்கூடாது, வேகமாக முக்கி மலம் கழிக்கக்கூடாது, மலச்சிக்கல் வராமல் பாதுகாத்தல் வேண்டும், அதிகமாக நீர் குடித்தல், நார்ச்சத்துள்ள உணவுகளை எடுத்தல், சமிபாடு அடையக்கூடிய உணவுகளை எடுத்தல், பழ வகைகளை எடுத்தல், ஓவ்வொரு நாளும் மலசலம் கழிக்கும் பழக்கத்தினை ஏற்படுத்திக்கொள்ளல், மலம் கழிப்பதற்கு கஷ்டமானவர்கள் இலகுவாக மலம் கழிக்கக்கூடிய மருந்துகளை எடுத்தல் போன்ற வழிமுறைகளை செய்து வந்தால் எம்மை நாம் பாதுகாத்துக் கொள்ளலாம்.

மூல நோய் உள்ளவர்கள் இறைச்சி வகை சாப்பிடக்கூடாது என்று எல்லோரும் கூறுவதைக் கேட்டுள்ளோம். ஆனால், இறைச்சிக்கும் மூலநோய்க்கும் எவ்விதமான தொடர்புகளும் இல்லை. இறைச்சி சாப்பிட்டால் மூலநோய் கூடும் அல்லது குறையும் என்றில்லை. இது முற்றிலும் பொய்யான கருத்தாகும். குறிப்பாக, மலச்சிக்கலை ஏற்படுத்துகின்ற எந்த வகை உணவுகளை எடுத்தாலும் அது மூலநோயை அதிகப்படுத்தும் என்பதுதான் உண்மையாகும்.

இதேபோன்று, மிக அதிகமாக அமர்ந்துகொண்டு வாகனம் செலுத்துகின்ற சாரதிகள், அலுவலகத்தில் வேலை செய்கின்றவர்கள், கனிணி வேலை செய்கின்றவர்களுக்கு, மூலநோய் ஏற்படுவதாக கூறப்படுகின்ற விடயமும் தவறாகும். மூலநோய்க்கும், நீண்ட நேரம் அமர்ந்திருப்பதற்கும் எவ்விதமான தொர்புகளும் இல்லை. ஆனால் வேறு நோய்கள் ஏற்பட வாய்ப்புக்கள் இருக்கலாமே தவிர மூலநோய் ஏற்படுவதற்கு ஒருபோதும் வாய்ப்புக்கள் இல்லை.

சாரதிகளை எடுத்துக்கொண்டால் அவர்கள் நீண்ட நேரம் பிரயாணம் செய்வதால் நீர் குடிப்பது குறைவு. அதனால் அவர்களுக்கு மலச்சிக்கள் ஏற்படுவதன் மூலம் இந்நோய் ஏற்படுவதற்குக் காரணமாக அமையலாம். மேலும் அலுவலகத்தில் வேலை செய்கின்றவர்களுக்கு அதிக வேலை காரணமாக மன அழுத்தம் ஏற்படுகிறது. அதனால் அவர்களுக்கு மலச்சிக்கள் உருவாகி மூலநோய் ஏற்படுவதற்கு காரணமாக அமையலாம்.

எனவே, மூலநோய் என்பது ஒரு பயங்கரமான நோயல்ல. இது எவருக்கும் எந்த வயதிலும் ஏற்படக்கூடிய ஒரு சாதாரண நோயாகும். இதற்கு ஒரு வைத்தியரை அனுகி ஆலோசனையைப் பெற்றுக்கொள்வது சாலச் சிறந்தது.

அவ்வாறல்லாது, மூலத்தால் இரத்தம் வெளியேறல், வலி ஏற்படல், கட்டி போன்ற ஏதேனும் ஒன்று ஏற்படும் பட்சத்தில் இது மூலநோய்தான் என்று தானாக முடிவெடுத்து அதற்கான சிகிச்சையை ஆரம்பித்துவிட வேண்டாம். இவ்வாறு பலர் தங்களுக்குள்ளே முடிவெடுத்துக்கொண்டு மூலநோய்க்கான வைத்தியம் பார்த்துவிட்டு இறுதியில் முற்றிப் பழுத்த ஒரு புற்று நோயாளியாகிய பின்னை வைத்தியரை நாடிச் செல்கின்றனர்.

எனவே, எந்த நோயாக இருப்பினும் அதன் இறுதிக் கட்டத்தை அடையும்வரை இருக்காது ஆரம்பித்திலேயே உரிய மருத்துவ ஆலோசனைகளைப் பெற்றுக்கொண்டு சுகதேகிகளாக வாழ முயற்சிப்போம்.



மட்டு. துஷாரா

sportsml77@gmail.com

SPORTS லீடர்




## கிழக்கு மாகாணத்தின் 19 வயதிற்குட்பட்ட சிறந்த கிரிக்கட் அணியாக

# கல்முனை ஸாஹிரா கல்லூரி தெரிவு

**-அஸ்ஹர் இப்றாஹிம்-**

இலங்கை பாடசாலைகள் கிரிக்கட் சம்மேளனம் ஸ்ரீலங்கா கிரிக்கட் நிறுவனத்துடன் இணைந்து ஒழுங்கு செய்திருந்த இலங்கையில் கிரிக்கட் துறையில் பிரகாசிக்கும் பாடசாலைகளை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை (26) கொழும்பு,பண்டாரநாயக சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் சிறப்பாக இடம்பெற்றது. இதன் போது கிழக்கு மாகாணத்தில் 19 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான சிறந்த கிரிக்கட் அணி விருது கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரி அணிக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டது.






இதன்போது கல்லூரி அதிபர் எம்.ஐ.ஜாபிர், கிறிக்கட் பயிற்றுவிப்பாளர் ஏ.எம்.அப்ராஜ் றிலா, விளையாட்டு பொறுப்பாசிரியர் எம்.ஐ.எம்.அமீர், கிறிக்கட் அணி மாணவ பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டு மேற்படி விருதினை பெற்றுக் கொண்டனர்.

# இராணுவ படையணிகளுக்கு இடையிலான ஜூடோ போட்டி





2024 இராணுவ படையணிகளுக்கிடையிலான ஜூடோ சம்பியன்ஷிப் போட்டி இம் மாதம் 22, 23, 24 மற்றும் 25 ஆம் திகதிகளில் பனாகொடை இராணுவ உள்ளக விளையாட்டரங்கில் நடைப்பெற்றது. இப் போட்டியில் 188 வீர வீராங்கனைகள் 02 பிரிவுகளில் போட்டியிட்டனர். பரபரப்பான இப்போட்டியில் சிங்க படையணி புதியவர் பிரிவில் சம்பியன்ஷிப்பை வென்றது. பெண்களுக்கான திறந்த பிரிவில் இராணுவ மகளிர் படையணி சம்பியன்ஷிபை பெற்றுக் கொண்டதுடன், இலங்கை பொறியியல் படையணி இரண்டாம் இடத்தைப் பிடித்ததுக்கொண்டது. ஆண்களுக்கான திறந்த பிரிவில் கஜபா படையணி சம்பியன்ஷிப்பை பெற்றுக் கொண்டதுடன், இலங்கை இராணுவ போர் கருவி படையணி இரண்டாம் இடத்தைப் பிடித்துக்கொண்டது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட இலங்கை இராணுவ பதவிநிலை பிரதானியும் இராணுவ ஜூடோ குழுவின் தலைவருமான மேஜர் ஜெனரல் தினேஷ் நாணயக்கார் தலைமையில் வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ் மற்றும் பதக்கம் வழங்கப்பட்டது. இப்போட்டியில் சிறந்த வீரராக இலங்கை இராணுவ போர் கருவி படையணியின் கோப்ரல் இ.எம்.என்.கே. சிந்தக மற்றும் சிறந்த வீராங்கனையாக இலங்கை இராணுவ மகளிர் படையணியின் கோப்ரல் டபிள்யூ.எல்.ஏ.எச். இமேஷா ஆகியோர் விருதுகளை பெற்றுகொண்டனர்.

# மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி தேசிய மட்ட டென்னிஸ் போட்டியில் சம்பியன்

**-அஸ்ஹர் இப்றாஹிம்-**

இலங்கை பாடசாலைகள் டென்னிஸ் சங்கம் நடாத்திய 13 வயதுக்கு உட்பட்ட அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய டென்னிஸ் சுற்றுப்போடியில் ஆண்களுக்கான பிரிவில் மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி வெற்றி வாகை சூடி சம்பியன் பட்டத்தை தனதாக்கியது. புனித மிக்கேல் அணியினர் இலங்கையின் பிரபல பாடசாலைகளான கொழும்பு ரோயல் கல்லூரி , கொழும்பு ஸாஹிராக் கல்லூரி, காலி ரிச்மென்ட் கல்லூரி என்பவற்றை முதல் சுற்றில் வென்று, அரை இறுதியில் கொழும்பு தேஸ்டன் கல்லூரியை வென்று, இறுதி போட்டியில் குருநாகல் மலிய தேவ கல்லூரியை வென்று சம்பியன் பட்டத்தை தனதாக்கி கொண்டது.



இப்பத்திரிகை இல.502,பிரதான வீதி, சாய்ந்தமருது -14யில் அமைந்துள்ள மெற்றோ மீடியா நெற்வேர்க் நிறுவனத்தில் 2024.09.28ம் திகதி அச்சிட்டுப்பிரசுரிக்கப்பட்டது.